ISSN (ONLINE): 3107-7862

# Delusional Disorder

## Types and Causes

Dr. மகேஷ் ராஜகோபால், மனநல மருத்துவர், அறம் மருத்துவமனை, திருச்சி.

Tamil Psychiatry Journal, Vol-2, Issue-1, Jan-Mar 2026, Page 15-17

சிலருக்கு கற்பனை எண்ணம் அதிதீவிரமாக ஏற்பட்டு, அதை உண்மை என்றே ஆணித்தரமாக நம்புவார்கள். அவ்வாறு கற்பனை எண்ணங்கள் வெறும் கற்பனை தான் உண்மையல்ல என்று எவ்வளவு தான் மற்றவர்கள் கூறினாலும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இவ்வாறான கற்பனை எண்ணங்கள் வெவ்வேறு வகைகளில் ஏற்படுகின்றன. வெறும் கற்பனை எண்ணம் மட்டும் ஏற்பட்டு, அதனால் அன்றாட வாழ்க்கையோ அல்லது மனநலமோ பாதிக்கப்பட்டால் அதற்கு Delusional disorder என்று பெயர். இந்த வகையான கோளாறுகள் பொதுவாக நீடித்தவையாகவும், சில சமயங்களில் வாழ்நாள் முழுவதும் நீடிப்பவையாகவும் இருக்கும்.

கோளாறுகளின் சர்வதேச வகைப்பாடு-10வது பதிப்பு (ICD-10), இந்நோயினை கண்டறிய கீழ்கண்ட நோயறிதல் வழிகாட்டுதல்களை முன் வைக்கிறது. Delusions தொந்தரவானது மிகவும் வெளிப்படையான அல்லது ஒரே மனநல அறிகுறியாக இருக்க வேண்டும். அவை குறைந்தது 3 மாதங்களுக்கு தொடர்ந்து நீடித்திருக்க வேண்டும். மற்றும் அவை மற்ற மனநல தொந்தரவுகளோடு இணைந்து இல்லாமல், தெளிவாக தனிப்பட்டவையாக இருக்க வேண்டும். நோயாளியின் மனநிலையில் எந்தக் கோளாறும் இல்லாத நேரங்களிலும் delusions நீடித்திருக்க வேண்டும். இவாறு இருந்தால் நாம் Delusional Disorder என்று கூறலாம். Delusional Disorder-இன் வகைகளை கீழே காணலாம்.

### Delusional Infidelity

தன் மனைவி மற்ற ஆணோடு கள்ளத்தொடர்பில் இருப்பதாக காணப்படும் கற்பனை எண்ணங்களுக்கு Delusional Infidelity என்று பெயர். இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மனைவி மீது அதீத கோபம், ஆத்திரம் அடைந்து மனைவியின் நடத்தையை கண்காணிக்கத் தொடங்குவார்கள். சிலர் மனைவியின் கைப்பை, அலைபேசி போன்றவற்றை அவர்களுக்கு தெரியாமல், ஆராய்ந்து பார்ப்பார்கள். இந்த சந்தேக எண்ணம் அதிகமாக மது அருந்துபவர்களுக்கு ஏற்படுகின்றது. மேலும், மனைவியின் மீது சந்தேகம் கொள்ளும் போது, அவர்கள் மீது கோபம் ஏற்பட்டு வன்முறையும் நிகழக் கூடும். இவ்வாறான சூழலில் பாதுகாப்பின் காரணமாக கணவனை விட்டு மனைவி சிறிது காலம் பிரிந்து இருப்பதே நல்லது(1).

### Erotomanic delusion:

தன்னைவிட உயர்ந்த அந்தஸ்தில் உள்ள பிரபலமான நபர் தன்னை காதலிப்பதாக கற்பனை எண்ணம் ஏற்படுவதற்கு Erotomanic delusion என்று பெயர். பொதுவாக பெண்களுக்கு தான் இது போன்ற கற்பனை எண்ணம் ஏற்படும். இது போன்ற கற்பனை எண்ணம் ஏற்படுவது மற்ற Delusional disorder வகைகளை விட அரிதாகவே ஏற்படும்(3)(4).

### Grandiose Delusion

தான் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதாகவும், உலகில் உள்ள முக்கிய புள்ளிகள் தன்னுடைய உறவினர்கள் என்றும், கற்பனையாக எண்ணுவது மற்றும் கடவுளுக்கும் தனக்கும் தொடர்பு இருப்பதாக நினைப்பது, இந்த உலகத்தை படைத்தது தான் என்று கூறுவது, போன்ற உயரிய எண்ணங்கள் ஏற்படுவதற்கு Grandiose Delusion என்று பெயர் .

### Persecutory Delusion

மற்றவர்கள் தனக்கு எதிராக சதித் திட்டம் தீட்டி தன்னை கொலை செய்ய திட்டமிடுவதாக சந்தேக எண்ணம் மற்றும் தன்னைப் பின் தொடர்வதாக கற்பனை எண்ணம் ஏற்பட்டு அதனால் மன உளைச்சலுக்கு ஆளாவது Persecutory Delusion ஆகும். இன் நோயால் பாதிக்கப்பட்ட நபர் சந்தேகம் காரணமாக தன்னை தற்காத்துக் கொள்ள தகுந்த நடவடிக்கை எடுக்க திட்டமிடுவார்கள். அதாவது, காவல்துறையை அணுகி புகார் அளிப்பது தற்காப்பிற்காக ஆத்திரம் அடைந்து ஆயுதம் ஏந்தி தாக்குவது போன்ற செயல்களில் ஈடுபடுவார்கள்.

**Somatic Delusion**

உடலில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டுள்ளதாக கற்பனை செய்து கொள்வது Somatic Delusion ஆகும். அதாவது, உடல் பாகங்கள் கோளாறாக இருப்பது, உதாரணத்திற்கு மூக்கு அல்லது கண்கள் வளைந்து கோணலாக இருப்பதாக எண்ணம் தோன்றுவது அல்லது உடலில் உறுப்பு செயல்பாடுகளில் பிரச்சனை இருப்பதாக தீவிரமாக எண்ணுவது ஆகியவை Somatic Delusion ஆகும். இது போன்ற எண்ணத்தினால் அதிக மன உளைச்சலுக்கு ஆளாவதோடு, பயம், பதட்டம், தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு மற்றவர்களை சந்திப்பதையும் தவிர்க்கத் தொடங்குவார்கள். சிலர் இந்நோய் தீவிரமடைந்து வீட்டை விட்டு வெளியில் செல்வதையும் தவிர்த்து விடுவார்கள்.

**Capgras syndrome**

இப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர் தங்கள் குடும்பத்தில் உள்ள நபர், உண்மையான குடும்ப நபரே அல்ல என்று சந்தேகம் கொள்வார்கள். இவர்களுக்கு பார்ப்பதற்கு மட்டும்தான் தன் குடும்ப நபரைப் போல் இருப்பதாகவும், ஆனால் உண்மையில் இவருக்குள் இருப்பது வேறு நபர் என்று ஆணித்தரமாக நம்புவார்கள். உதாரணமாக, அம்மாவைப் பார்க்கும் பொழுது அவர் மந்திரவாதியாகத் தெரிவது(5) .

**Cotard syndrome**

இந்நோய் உள்ளவர்கள், தங்களுடைய உடல் உறுப்பு கெட்டு விட்டதாக கற்பனை எண்ணத்தில் காணப்படுவார்கள். இதனால் மனம் உடைந்து போவார்கள். தன்னுடைய அந்தஸ்தோ அல்லது உடைமையையோ தொலைத்து விட்டதாக கற்பனையாக நம்புவார்கள்.

**Shared Delusion**

குடும்பத்தில் உள்ள நபர் யாருக்கேனும் ஒரு சந்தேக எண்ணம் இருந்தால், அதே சந்தேகம் என்னும் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் என்று கற்பனையாக நம்புவது Shared Delusion ஆகும்.

**Delusional Disorder ஏற்படுவதற்கான காரணங்கள்:**

Delusional Disorder ஏற்படுவதற்கான உண்மையான காரணங்கள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. தனிமையில் வாழ்வது, குறைந்த சுயமதிப்பீடு, மற்றவர்கள் மீது ஏற்படும் பொறாமை மற்றும் சந்தேக குணம் போன்ற காரணங்களால் Delusional disorder ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. மேலும், ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு புலம் பெயர்தல், மொழி பிரச்சனை, காது கேளாமை போன்றோருக்கு Delusional Disorder ஏற்படுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது(2)

இந்நோய் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம அளவிலே ஏற்படும். ஆனால், Persecutory Delusion மற்றும் Delusion of Infidelity ஆண்களுக்கு அதிகமாகவும், Erotomanic delusion பெண்களுக்கு அதிகமாகவும் காணப்படும். இந்நோய் ஆயிரத்தில் ஒருவருக்கு ஏற்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்நோய் பொதுவாக 40 வயது உடையவர்களுக்கு அதிகம் ஏற்படும்.

Delusional Disorder நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் பார்ப்பதற்கு சராசரி மனிதரைப் போல் செயல்படுவார்கள். அதாவது, உடை அணிவதிலும், மற்ற பணிகளில் ஈடுபடுவதிலும் எந்த பிரச்சனைகளும் இருக்காது. Grandiose Delusion என்னும் வகை நோயினால் பாதிக்கப்பட்டவர் அதற்கேற்றார் போல் அதீத சந்தோஷ மன நிலையிலும், Persecutory Delusion வகை நோயினால் பாதிக்கப்பட்டவர் கோபமான அல்லது பதட்டமான மனநிலையிலும் காணப்படுவர். இவர்களுடைய எண்ணங்கள் கற்பனை எண்ணங்களாகவே இருப்பது இந்நோயின் இயல்பாகும். இவர்களுக்கு மன சிதைவு (Schizophrenia) போல காதில் குரல் கேட்பது போன்ற அறிகுறிகள் இருக்காது. Delusional Disorder நோய் இருப்பவர்கள் தங்களை மீறி கட்டுப்பாடு இழந்து, தற்கொலை எண்ணத்தோடு செயல்படுவது அல்லது தற்காப்பு கருதி மற்றவர்களை தாக்கும் செயல்களில் ஈடுபடுவது போன்ற விபரீத செயல்களில் ஈடுபடுவார்கள். இவர்களுடைய பிரச்சினையை பற்றி புரிதல் இவர்களுக்கு துளி அளவும் இருக்காது. மேலும், கற்பனைக்கு எட்டாத நிஜ வாழ்க்கையில் நடக்க வாய்ப்பில்லாத கற்பனையான எண்ணங்களுக்கு **Bizarre Delusion** என்று பெயர்.

Delusional Disorder நோயினால் பாதிக்கப்பட்டவர்களிடம் மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் பேசுவதன் மூலம் அவருடைய எண்ணங்கள் எப்படிப்பட்ட கற்பனை வகையைச் சார்ந்தது என்று தெரிந்து கொள்ள முடியும். மேலும்,

இவர்கள் **Mental State** நிலையை ஆழமாக ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். மேலும், இவர்கள் போதை பொருட்கள் எடுத்ததனால் இவ்வகை நோய் ஏற்பட்டுள்ளதா என்பதை தெரிந்துகொள்ள **Urine Drug Screen Test** செய்து பார்க்க வேண்டும். உடல் ரீதியான பாதிப்புகளினால் இவ்வகையான மனநோய் சில நேரங்களில் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகையால் மருத்துவர்கள் உடற் பரிசோதனை மற்றும் தகுந்த மூளை ஸ்கேன் செய்து பார்த்தல் வேண்டும்.

இவ்வகையான Delusional Disorder மன நோய்க்கு Antipsychotic மருந்துகள் பரிந்துரைக்க வேண்டும். மேலும், பொதுவாக குறைந்த அளவு மாத்திரைகளை முதலில் பரிந்துரை செய்து, பின்பு மெதுவாக மாத்திரையின் அளவினை மனநல தொந்தரவுக்கு ஏற்றவாறு அதிகரித்தல் வேண்டும். முதலில், ஆறு வாரங்கள் ஒரு மாத்திரையை கொடுத்து பார்த்த பின்பு இரண்டாவது மாத்திரை தேவைப்பட்டால் மாற்றி கொடுத்தல் வேண்டும்.

**REFERENCE:**


1. Kataoka H, Sugie K. Delusional Jealousy (Othello Syndrome) in 67 Patients with Parkinson's Disease. Front Neurol. 2018;9:129.
2. Mendez I, Axelson D, Castro-Fornieles J, Hafeman D, Goldstein TR, Goldstein BI, Diler R, Borras R, Merranko J, Monk K, Hickey MB, Birmaher B. Psychotic-Like Experiences in Offspring of Parents With Bipolar Disorder and Community Controls: A Longitudinal Study. J Am Acad Child Adolesc Psychiatry. 2019 May;58(5):534-543.e6.
3. Kelly BD. Love as delusion, delusions of love: erotomania, narcissism and shame. Med Humanit. 2018 Mar;44(1):15-19
4. Faden J, Levin J, Mistry R, Wang J. Delusional Disorder, Erotomanic Type, Exacerbated by Social Media Use. Case Rep Psychiatry.
5. Currell EA, Werbeloff N, Hayes JF, Bell V. Cognitive neuropsychiatric analysis of an additional large Capgras delusion case series.